**இலங்கை இறப்பர் ஆராய்ச்சி சபை - 2025**

-----------------------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை இறப்பர் ஆராய்ச்சி சபையின் ("சபை") 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1930 இன் 10 ஆம் இலக்க இறப்பர் ஆராய்ச்சி கட்டளைச் சட்டத்தின், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

சபையின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்து செயப்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும். முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் சபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து

செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன், அந்த வெளிப்படுத்தல்கள் போதியளவினதாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயம் மாற்றியமைக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையினால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- சபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவையின் அத்தியாயம் XV பிரிவு 4:7 | கல்வி அலுவல்களுக்காக சம்பளம் இன்றி விடுமுறை பெற்று வெளிநாடு சென்றுள்ள பிணைமுறி நிபந்தனைகளை மீறிய 02 உத்தியோகத்தர்களிடம் | பிணைமுறி மற்றும் ஒப்பந்தமுறி தீர்க்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக அறிவுரை பெற்றுக்கொள்வதற்காக | தாபனக் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | |
|---|---|
| 2025 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 35 வருடங்களை மிகைத்துள்ள அறவிடப்படாத பெறுமதியாகிய ரூபா 2,761,933 தொகையினை அறவீடு செய்தல் தொடர்பாக நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை. | சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டது. அதன்படி, எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 55,345,347 இற்கான பற்றாக்குறையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 120,923,726 தொகையாக காணப்பட்டது. அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 65,578,379 இற்கான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு அரச மானியம் ரூபா 134,082,395 தொகையிற்கான மற்றும் தோட்ட வருமானம் ரூபா 28,037,108 தொகையினால் அதிகரித்தல் பிரதான காரணமாக இருந்தது.

**2.2 பிரதான வருமானங்கள் மற்றும் செலவு விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு**

| விடயம் | மீளாய்வாண்டு<br>ரூபா | முன்னைய ஆண்டு<br>ரூபா | முன்னைய ஆண்டுடன் மாற்றமடைதல்<br>ரூபா | மாற்றமடைந்த சதவீதம் |
|---|---|---|---|---|
| அரச மானியங்கள் | 578,291,838 | 444,209,443 | 134,082,395 | 30 |
| ஏனைய வருமானங்கள் | 14,398,947 | 37,972,808 | (23,573,861) | (62) |
| தோட்ட வருமானம் | 147,119,126 | 119,937,401 | 27,181,725 | 23 |
| சம்பளம், வேதனம் மற்றும் ஊழியர் நலன்கள் | 425,650,467 | 373,984,958 | 51,665,509 | 14 |
| வழங்கல் மற்றும் நுகர்வுச் செலவு | 32,234,697 | 38,963,837 | (6,729,140) | (17) |
| பெறுமானத் தேய்வு மற்றும் காலத் தேய்மானச் செலவு | 121,470,968 | 127,053,972 | (5,583,004) | (4) |
| ஏனைய செலவுகள் | 129,694,605 | 120,945,903 | 8,748,702 | 7 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டிற்கு நேரொப்ப மீளாய்வாண்டின் போது ஏனைய வருமானங்கள் 62 சதவீதத்தினால் குறைவடைந்திருந்ததுடன், பயிற்சி மற்றும் அறிவுரை வருமானம் குறைவடைதல் இந்த நிலைமைக்கு நேரடியாக தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் அரச மாணியம் என ரூபா 578.29 மில்லியன் தொகை அதாவது கடந்த ஆண்டிற்கு நேரொப்ப அரச மானியம் 30 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

**2.3 விகிதாசாரப் பகுப்பாய்வு**

மீளாய்வாண்டின் நடைமுறைச் சொத்துக்கள் விகிதாசாரம் மற்றும் திடீர் சொத்துக்கள் விகிதாசாரம் முறையே 3.48:1 மற்றும் 2.69:1 தொகையாக காணப்பட்டதுடன், முன்னைய

ஆண்டின் போது அந்தப் பெறுமதிகள் 2.9:1 தொகை மற்றும் 2.3:1 தொகையாக காணப்பட்டது. நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 6,358,829 இனால் அதிகரித்தல் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 4,285,590 தொகையினால் குறைவடைதல், நடைமுறை விகிதாசாரம் மற்றும் திடீர் சொத்து விகிதாசத்தின அதிகரிப்புக்கு காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 1991 ஆண்டில் குருவிட தோட்டத்தில் 6.5 ஹெக்டயர் பகுதியில் பயிர் செய்யப்பட்ட இறப்பர் மரங்களை அகற்றும் உடன்படிக்கையின் 12 ஆவது பிரிவின் பிரகாரம் முன்னைய கொடுப்பனவு பற்றுச்சீட்டுக்களை மெய்மையாய்வு செய்யாமல் அனைத்து இறப்பர் மரங்களையும் அகற்றிக்கொள்வதற்கு இடமளிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 1,677,284 இற்கான நிலுவைத் தொகையொன்று 2026 ஜூலை 16 திகதி அளவிலும் அறவீடு செய்திருக்காமை, 1993 பயிர்ச் செய்கையில் 472 மரங்களுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 2,369,275 தொகையில் ரூபா 71,064 இற்கான குறைவொன்று காணப்படல் மற்றும் 1994 மற்றும் 1988 பயிர்ச் செய்கை நிலப் பகுதிகளில் உடன்படிக்கையின் 16 ஆவது பிரிவின் படி கொள்வனவாளர்களால் கணிக்கப்பட்டு ஒப்புக்கொண்ட இறந்த / அழிவடைந்த மரங்களுக்காக நிபந்தனைகளுக்கு மாற்றமாக முறையே ரூபா 16,700 இற்கான மற்றும் ரூபா 33,250 இற்கான தொகைகள் கழிக்கப்பட்ட காரணத்தினால் ஒட்டுமொத்தமாக மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 1,798,298 இற்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | குருவிட தோட்டத்தின் ஆரம்ப உடன்படிக்கைக்கு பிரகாரம் இறுதியில் காணப்பட்ட பௌதீக நிலைமையின் மீது செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையென ரூபா 731,469.00 தொகை ஒப்பந்தக்காரர்களுக்கு உடனடியாக செலுத்தும் படி சிரேஷ்ட தோட்ட முகாமையாளர்களினால் அறிவிக்கப்பட்டிருந்தது. 1993 பயிர்ச் செய்கை உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 2,369,275 இற்கான தொகையொன்று செலுத்துவதற்கு ஒப்பந்த வேலையின் ஆரம்பத்தில் உத்தேசித்திருந்த போதிலும், மரங்களின் பௌதீக ரீதியாக ஏற்பட்டிருந்த வித்தியாசம் காரணமாக செலுத்த வேண்டிய நிலுவைப் பெறுமதி ரூபா 51,015 தொகை தற்போது தீர்க்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கு மாற்றமாக செயற்பட்டிருந்தமையால் ஏற்பட்டிருந்த நட்டத்தை குறிப்பிட்ட தரப்பினரிடம் அறவீடு செய்யப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 02 வருடங்களுக்கு அண்மித்த காலம் முதல் அணு அளவு வரையறுக்கப்பட்ட சேவை மையம் (FEAS CENTER) கருமங்கள் முழுமையாக நிறுத்தப்பட்டிருந்த காரணத்தினால் குறிப்பிட்ட கட்டிடம் மற்றும் ரூபா 38,918,694 தொகைக் கிரயத்தையுடைய கணினிகள் மற்றும் மென்பொருட்கள், இயந்திரங்கள், தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் அனைத்தும் விளைவற்றுக் காணப்பட்டது. அந்த FEAS மையம் 2018 – 2023 முன்னேற்றத்தை காட்டிய அறிக்கையின் படி உடன்படிக்கையின் இரண்டாவது தரப்பினரான இலங்கை பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் சபையினால் ரூபா 8,141,743 தொகை குறிப்பிடப்பட்ட உடன்படிக்கைக் காலப் பகுதியில் உழைக்கப்பட்டிருந்த போதிலும் இந்த உடன்படிக்கையின் முதலாவது தரப்பினரான சபைக்கு எதுவித தொகையும் கிடைத்திருக்கவில்லை. | PRISL மற்றும் RRISL இடையே கையொப்பமிடப்பட்டிருந்த புரிந்துணர்வு உடன்படிக்கையின் படி இரு தரப்பினர்களினதும் பொறுப்புக்கள் வெவ்வேறாக காட்டப்பட்டிருந்தது. அங்கு இறப்பர் ஆராய்ச்சி நிலையத்தின் மூலம் இந்த நிலையத்திற்கு தேவையான உபகரணங்கள் கொள்வனவு செய்தல், நிலையத்தை பேணிச் செல்வதற்கு தேவையான இடமொன்று, அடிப்படை வசதிகள் வழங்குவதற்கு இணங்கியிருந்தது. அதன்படி, உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டது. | விளைவற்ற சொத்துக்கள் ஆக்கபூர்வமான கருமங்களில் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான 43 இற்கு மிகையான எண்ணிக்கையான காணிகள் மற்றும் கட்டிடங்கள் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தினால் பயன்படுத்தப்பட்டு வருவதுடன், இந்தக் காணிகளை சபைக்கு பெற்றுக்கொள்வதற்காக அல்லது திணைக்களத்திற்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் அதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொண்டு அதன்படி நடவடிக்கை எடுக்கப்படும். | சபைக்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்களின் உரிமையை தீர்த்துக்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சபைக்குச் சொந்தமான 86 மொத்த உத்தியோகபூர்வ வாசஸ்தளங்களில் 17 வாசஸ்தளங்களில் 01 வருடம் முதல் 06 வருடங்கள் காலம் வரை எவரேனும் குடியமர்த்தப்பட்டிருக்காததுடன், அந்த உத்தியோகபூர்வ வாசஸ்தளங்கள் திருத்த வேண்டிய நிலைமையில் காணப்பட்டது. | எதிர் காலத்தில் கிடைக்கக் கூடிய ஏற்பாடுகளின் கீழ் இந்த உத்தியோகபூர்வ வாசஸ்தளங்கள் அத்தியவசியமான திருத்த வேலை அலுவல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உத்தியோகபூர்வ வாசஸ்தளங்கள் ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | சபையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற மொணராகல, குமாரவத்த மற்றும் அலவ்வ நாலன்பொல வத்த ஆகிய தோட்டங்கள் மீளாய்வாண்டின் இறுதித் திகதி அளவிலும், சபைக்கு முறைப் பிரகாரம் உரித்தாக்கப்பட்டிருக்கவில்லை. | காணிகளை தனதாக்களுக்காக பிரதேச செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | தோட்டங்களின் உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.3 செயற்பாட்டுத் திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்புடன் 2017 ஆண்டின் போது உடன்படிக்கை மேற்கொண்டு 2022 ஆண்டில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த சிறிய இறப்பர் காணிகளின் உரிமையாளருக்காக உயிர் வாயு எரிபொருள் மர வகைகள் அறிமுகப்படுத்தும் முன்னோடிச் செயற்திட்டத்தின் கருமங்கள் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்படாமையால் அதற்காக கிடைக்கின்ற ரூபா 10,457,200 இற்கான தொகையில் மீளாய்வாண்டு இறுதித் திகதியளவில் ரூபா 4,283,644 தொகை அதாவது 40 சதவீதத் தொகையொன்று மீதியாகக் காணப்பட்டது. | செயற்திட்டக் காலப் பகுதியில் நாட்டில் நிலவிய கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை மற்றும் எரிபொருள் நெருக்கடி காரணமாக செயற்திட்டத்தின் தொழிற்பாடுகள் வீழ்ச்சியடைவதற்கான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது என. | உடன்படிக்கைசார் கருமங்கள் குறிப்பிட்ட காலப் பகுதியில் நிறைவேற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.4 விளைவற்ற அல்லது குறைபயன்பாட்டு ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 ஆண்டில் ரூபா 4,052,300 இற்காக கொள்வனவு செய்திருந்த இறப்பர் ஆராய்ச்சி அலுவல்களுக்காக பயன்படுத்தப்படுகின்ற Mooney Viscometer இயந்திரத்தின் மென்பொருள் வழுவொன்று காரணமாக 2018 ஆண்டு முதல் கணக்காய்வுத் திகதி வரை திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | Mooney Viscometer இயந்திரத்தின் திருத்த வேலை மேற்கொள்ள முடியுமா என கண்டறிவதற்காக விஷேடத்துவ அறிவுடைய நபரொருவரின் சேவையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உபகரணங்களை ஆக்கபூர்வத் தன்மையுடன் பயன்படுத்த வேண்டும். |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 11 திகதி இறப்பர் ஆராய்ச்சி அலுவல்களுக்காக ரூபா 20,034,200 இற்காக கொள்வனவு செய்திருந்த GC – MS இயந்திரம் 2026 பெப்ரவரி 13 திகதி அளவிலும் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. | கட்டிடத்தின் பராமரிப்பு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் இந்த உபகரணங்களை உரிய முறையில் நிறுவப்பட்டு முன்பரிசோதனை அலுவல்கள் மேற்கொள்ளப்படும். | இயந்திரங்கள் ஆய்வு அலுவல்களுக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | ரூபா 2,064,855 தொகை செலவிடப்பட்டு 2021 ஒக்தோபர் 29 திகதி கொள்வனவு செய்திருந்த Fume Hood இயந்திரம் 2024 ஆண்டு முதல் திருத்த வேலை மேற்கொள்ள வேண்டிக் காணப்பட்ட போதிலும், 2026 மார்ச் 05 திகதி அளவிலும் இந்த திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படவில்லை. | Fume Hood இயந்திரம் தற்போது திருத்த வேலை அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | இயந்திரம் ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட வேண்டும். |

**3.5 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1988 ஆண்டில் டாடர்ன் பீல்ட் தோட்டத் தொகுதியில் பயிர்ச் செய்கை மேற்கொண்டிருந்த 4.83 ஹெக்டயர் பகுதியில் இறப்பர் மரங்களை அகற்றும் உடன்படிக்கையின் 07 ஆவது பிரிவின் பிரகாரம் 1156 இறப்பர் மரங்களில் 1000 இறப்பர் | இங்கு நீர் ஓட்டத்துடனான அடர்த்தியாக வளர்ந்துள்ள காடொன்றுடனான பகுதியொன்று காணப்படுவதனால் இந்த காடு அடுத்த ஆகஸ்ட் மாதம் வரட்சியான காலத்தில் துப்புரவு செய்து தீ வைத்தல் | உடன்படிக்கையின் நிபந்தனைகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மரங்களின் வேர்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், 04 ஆவது பிரிவின் படி அதற்கு எதிராக பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு நிருவாக அதிகாரியினால் முடியாமல் இருந்தது. இதன் காரணமாக குறிப்பிட்ட வேர்களை அகற்றுவதற்காக இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு மேற்கொள்வதற்கு நேரிடுகின்ற மிகைக் கிரயம் ரூபா 200,000 இற்கான பிணை முறியில் இருந்து அணவல் செய்வதற்கு முடியாமல் இருந்தது. | மேற்கொள்வதற்காக எதிர்பார்க்கப்படுகின்றதென சிரேஷ்ட தோட்ட அத்தியட்சகரினால் குறிப்பிடப்பட்டிருந்தது. | |
| (ஆ) | 1991 ஆண்டில் 6.5 ஹெக்டயர் பயிர் செய்யப்பட்ட குருவிட பகுதியில் இறப்பர் மரங்களை அகற்றுவதற்காக உடன்பட்டிருந்த கால வரையறை (2025/10/20) மிகைத்து எதுவித எழுத்துமூல கோறிக்கை அல்லது அங்கீகாரம் இன்றி உடன்படிக்கை நிபந்தனைக்கு முரணாக இறப்பர் மரங்களை அகற்றுவதற்காக இடமளித்திருப்பதால் மற்றும் உடன்படிக்கையின் 04 ஆவது நிபந்தனையின் பிரகாரம் மேலதிக பணிப்பாளர் மூலம் ஒப்பந்தத்தை இரத்துச் செய்வதற்கு சிரேஷ்ட தோட்ட முகாமையாளர் நடவடிக்கை எடுத்திருக்காமையால் ஏற்பட்டிருந்த கால தாமதம் மற்றும் அரசுக்கு ஏற்பட்டிருந்த நிதிசார் நட்டம் தொடர்பாக நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை. | நிலவிய மழையுடன் கூடிய காலநிலை போன்ற இயற்கை நிலைமையின் கீழ் மண் தோண்டி அகற்றுவதில் தாமதமடைந்தது. எனினும், அந்த மரங்களின் ஆரம்ப மதிப்பீட்டு விலையை விட கூடிய பெறுமதியொன்றுக்கு ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டிருந்தமையால் ஒப்பந்த வேலையை இரத்துச் செய்யாமல் இறுதிக் கட்டத்தை முன்னெடுத்துச் செல்லப்பட்டதென அறிவிக்கப்பட்டிருந்தது. | உடன்படிக்கையின் நிபந்தனைகளை மீறியமை தொடர்பாக பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.6 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2025 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையில் அங்கீகரிக்கப்பட்ட 460 பதவிகளில் 209 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டது என அவதானிக்கப்ட்டது. அவற்றில் சிரேஷ்ட மட்ட உத்தியோகத்தர்களின் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கையாகிய 88 இல் 59 தொகை வெற்றிடமாக காணப்பட்டது. | பதிலளிக்கப்படவில்லை. | வெற்றிடங்களை விரைவாக நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகரமொன்றின்றி நிறுவனத்தின் பிரதான கடமை (முகாமைத்துவ உதவியாளர் சேவை மற்றும் ஆய்வுகூட உதவியாளர்) இற்காக நாளந்தம் சம்பளம் பெறும் 01 வருடம் முதல் 11 வருடங்கள் வரையான சேவைக் காலத்துடனான 25 உத்தியோகத்தர்கள் சபைக்கு இணைக்கப்பட்டு, சபையின் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | பதிலளிக்கப்படவில்லை. | முகாமைத்துவ சேவை அங்கீகாரத்தின் மீது மாத்திரம் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 4 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 குறிக்கோள்கள் மற்றும் கூட்டிணைந்த திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகரித்துச் செல்லும் கேள்விக்கு ஏற்ற வகையில் உள்நாட்டு இயற்கை இறப்பர் உற்பத்தியை முன்னேற்றுதல் நிறுவனத்தின் குறிக்கோளொன்றாக காணப்பட்ட போதிலும், அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையின் படி 2024 ஆண்டின் இறப்பர் உற்பத்தி 69 மில்லியன் கிலோகிராமாக காணப்பட்ட போதிலும், 2025 ஆண்டளவில் | பதிலளிக்கப்படவில்லை. | உற்பத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 62 மில்லியன் கிலோகிராம் வரை குறைவடைந்திருந்தமையால் அந்த குறிக்கோளை நிறைவேற்றிக்கொள்வதற்கு முடியாமல் இருந்தது. | | |
| (ஆ) | 2021 நவம்பர் 16 திகதிய பீஈடி 01/2021 இலக்கம் கொண்ட அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் வழிகாட்டல் கைநூலின் பிரிவு 2.3 இன் பிரகாரம் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், சபையினால் 2025 ஆண்டிற்காக கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | சுற்றறிக்கை அறிவுரைகளின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4.2 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் குறிக்கோள்சார் தொழிற்பாடுகளின் முன்னேற்றம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மரபியல் மற்றும் தாவர இனவிருத்தித் திணைக்களத்தின் வருடாந்த கையினால் மகரந்தச் சேர்க்கைத் (HP) திட்டத்தின் 2025 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி ரூபா 200,000 தொகை செலவிடப்பட்டு புதிய 200 மரபியல் வகைகள் அபிவிருத்தி செய்வதற்காக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், பௌதீக முன்னேற்றத்தின் படி 30 வகையான மரபியல் மாத்திரம் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்ததுடன், அது 15 சதவீதமான குறைந்த பெறுமதியொன்றினை கொண்டிருந்தது. | சீரற்ற காலநிலை நிலைமை மற்றும் நோய் நிலைமை காரணமாக விதைகளை உற்பத்தி செய்தல் மற்றும் விதைகளை பரவல் செய்தல் பாரிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்திருந்தது. | எதிர்பார்த்த செயற்திட்டம் ஆக்கபூர்வமாக செயற்படுத்த வேண்டும். |
| (ஆ) | தாவரவியல் திணைக்களத்தில் இறப்பர் நாட்டு மேடைகளுக்காக தானியங்கி நுண்நீர்ப்பாசன முறைமையொன்று அறிமுகப்படுத்துவதற்காக ரூபா 300,000 தொகை மதிப்பீட்டுத் தொகையினை முழுமையாக | இந்த செயற்திட்டம் மொரட்டுவ பல்கலைக் கழகத்துடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டதுடன், சுயமாக செயற்படு தானியங்கி முறைமையை மேலும் அபிவிருத்தி செய்வதற்காக | எதிர்பார்த்த செயற்திட்டம் கால ரீதியாக பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

செலவிடப்பட்டிருந்த போதிலும் அதன் முன்மாதிரி அமைப்பு (prototype system) அபிவிருத்தி செய்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதனை களத்திற்காக அறிமுகப்படுத்துதல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதன் விளைவின் படி தொடர் ஆய்வுகளுக்கு திட்டமிடப்படும்.